# திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4685/அ1/2023 நாள்: .08.2023

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி – திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, இளநிலை உதவியாளர் திரு.வே.ஏழுமலை. என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 31.12.2021 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. திருவண்ணாமலை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4463/அ1/2021 நாள்:31.12.2021
2. கீழ்பென்னாத்தூர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் கடிதம் ந.க.எண்.52/2023 நாள்:03.04.2023
3. திருவண்ணாமலை மாவட்டக்கல்வி அலுவலரின் (இடைநிலை) கடிதம் ந.க.எண்.2288/அ1/2023 நாள்:12.05.2023

*************

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.வே.ஏழுமலை என்பாருக்கு பார்வை (1) காணும் திருவண்ணாமலை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 31.12.2021 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துவினை பார்வை (3) இல் காணும் திருவண்ணாமலை, மாவட்டக்கல்வி அலுவலரால் (இடைநிலை) பரிந்துரை செய்து இவ்வலுவலகம் பெறப்பட்டது.

திருவண்ணாமலை, மாவட்டக்கல்வி அலுவலரின் (இடைநிலை) பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 31.12.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

- பணிவரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.
- தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை முடித்து, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
- தகுதிகாண் பருவம் முடித்து ஆணை பெற்ற பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள்வழங்கப்படவேண்டும்.
- இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் தேதியில் இருந்து ஐந்தாண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில் இளநிலை உதவியாளர் பதவியில் நீடிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (தலைமையாசிரியர் மூலமாக)

நகல்
1. மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை), திருவண்ணாமலை.
2. தலைமையாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கீழ்பென்னாத்தூர்.